# வாழ்வின் வேதனைகளில் தேவன் எங்கு இருக்கிறார்? - நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்**: இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், வாழ்க்கை  ஆச்சரியம் நிறைந்திருப்பதை பற்றி பார்க்க இருக்கிறோம். ஒருநாள் நீங்க ரொம்ப சந்தோஷமா இருப்பதாக தோன்றும், மறுநாள் மருத்துவர் உங்களுக்கு வாழ்நாள் முழுதும் தீராத பெலவீனம் இருப்பதாக சொல்லலாம். விபத்துகள், இயற்க்கை சீற்றங்கள், குற்றங்கள், இயலாமை போன்றவை எந்த நொடியிலும் வாழ்க்கையை திருப்பி போடா வாய்ப்புண்டு. அப்படி நடக்கும் போது, ஜனங்க கேட்ப்பாங்க, "வாழ்க்கையில் இந்த மாதிரியான வேதனைகளில் தேவன் எங்கதான் இருக்காரு? அப்படி பட்ட மக்கள் அவர்களை காட்டிலும் அதிக வலியும் வேதனையும் அனுபவிக்கும் மக்களிடமிருந்து பதில்களை பெற வேண்டும். இன்றைக்கு அப்படிப்பட்ட இரண்டு பேரை பார்க்க இருக்கிறோம்.

ஜோனி எரிக்சன் டாடா தனது பதினேழு வயதில் நீச்சலடிக்க குதித்த போது தனது தண்டுவடத்தை உடைத்துகொண்டார்கள், அதினால் குவாட்ரிப்லீகியா ஏற்பட்டது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக சக்கர நாற்காலியில் தான் இருக்கிறார்கள். இதுமட்டுமல்ல, அவர்களுக்கு

மார்பக புற்றுநோயும் இருக்கிறது, ஒவ்வொரு நாளும் தீராத வேதனையை அனுபவித்து வருகிறார்கள். Dr. மைகேல் எஸ்லே இவர் மூடி வேதாகம கழகத்தின் முதல்வராக இருந்தார், ஆனால் தாங்க முடியாத கடுமையான வேதனை உண்டான போது ராஜினாமா செய்துவிட்டார். அவர் வேதனை மிகுந்த பல அறுவை சிகிச்சைகளை செய்து இருக்கிறார், மருத்துவர்கள் அவருடைய தண்டுவடத்தின் அனைத்து தட்டுகளையும் அகற்றி அவருடைய ஜீவனை காப்பாற்ற எல்லா எலும்புகளையும் ஒன்று சேர்த்து தண்டுவடத்தை நிற்க வைத்திருக்கிறார்கள். இப்போது அவர் பிறேன்ட்வுட் பெல்லோஷிப் பைபிள் திருச்சபையை நடத்தி வரும் போதகராக இருக்கிறார், டேநேன்சீ, ஆனாலும் ஒவ்வொருநாளும் தீராத வேதனையை அனுபவித்து வருகிறார். வாழ்வின் வேதனைகளில் தேவன் எங்கு இருக்கிறார் என்பதற்கு இவர்கள் இருவரும் பதிலளிக்க இருக்கிறார்கள். இந்த ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியின் விசேஷித்த தொகுப்பை காண அன்போடு அழைக்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்**: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான் தான் ஜான் அன்கேர்பெர்க், நிகழ்ச்சியில் இணைந்துகொண்டதற்கு நன்றி. நீங்கள் கேட்டுக்கொண்டு இருப்பது போல நம்மத்தியில் இருந்து சிறப்பு விருந்தினர்கள் இருக்காங்க, Dr. மைகேல் எஸ்லே மற்றும் ஜோனி எரிக்சன் டாடா. இன்றைய தலைப்பு

மிக முக்கியமான ஒன்று. ஏன் இயலாமையோடு வியாதியில் வேதனையோடு இருக்கிற நபர்கள் - ஒருவேளை உங்களை பற்றி கூட பேசிக்கொண்டு இருக்கலாம். உங்களுக்கு புற்றுநோய் இருக்கலாம், அல்லது ALS இருக்கலாம்; ஒருவேளை ஏதாவது இயலாமை இருக்கலாம்; முடக்குவாதம் உண்டாகியிருக்கலாம்; இல்ல வேறு ஏதாவது பிரச்சனை இருக்கலாம் - நீங்க ஏன் தேவனுக்கு முக்கியமானவர்களாக இருக்கிறீர்கள்? உங்களுடைய வாழ்க்கைக்கு அர்த்தமும் நோக்கமும் எப்படி உண்டாகிறது? ஒருவேளை இந்த எண்ணமே இல்லாம இருக்கீங்களோ. இதை கேட்டுகொண்டிருக்கிறவர்களில் சிலர் ஜோனியை போல இயலாமையில் இருக்கலாம்; சக்கர நாற்க்காலியிலோ அல்லது படுத்த படுக்கையிலோ இருக்கலாம். ஒருவேளை என்னுடைய தாயாரை போல இருக்கலாம் அவங்களுக்கு லூ கேஹ்ரிக் வியாதி இருந்தபோது அவங்களால நடக்க முடியாம பேச முடியாம இருந்தாங்க. உங்க மனம் திடமாக இருக்கலாம், ஆனா உங்க சரீரத்தில் நீ கட்டப்பட்டு இருக்கலாம். அது உங்களுடைய முழு சூழலையும் பாதிக்கிறது ஆனா அதை குறித்து உங்களால எதையும் செய்ய முடியல.

ஜோனி, சிலர் உணர்ச்சி பூர்வமான இழப்பை அடைகிறார்கள். குழந்தைய இழப்பது, கணவரை இழப்பது, மனைவி, அல்லது பாசதிற்குரியவங்களை இழப்பது. இப்படிப்பட்டவர்கள் தாங்கள் தேவனுக்கு முக்கியமானவர்கள் என்பதை அறிந்துகொள்வது எப்படி,

அவர்களுடைய வாழ்க்கைக்கு நோக்கமும் அர்த்தமும் இருக்கிறதல்லவா, படுத்த படுக்கையாக இருந்தால், எழும்ப முடியாத நிலையில், சக்கர நாற்காலியில் முடங்கியிருந்தால், அவர்களுடைய இந்த வேதனை இப்பிரபஞ்சத்தை படைத்த தேவனால் கவனிக்கபடாததாக இருக்குமோ இதற்கு நித்திய பலன் இல்லாமல் போகுமோ?

ஜோனி எரிக்சன் டாடா: சரி, நீங்க பேசறத கேட்கும்போது எனக்கு என்னோட நண்பரோட ஞாபகம் வருது ஜான் மெக் அலெக்ஸ்சாண்டர். ஆறடி மூணு அங்குலம், ஆணழகன். ஆனா அவருக்கு நியூரோமஸ்குலார் வியாதி ஏற்பட்டதால அவனோட உடம்பு பாழாகிவிட்டது. ரொம்ப நாளா அவர் தன்னோட மூன்று சக்கர ஸ்கூட்டர்ல தான் பயணித்தார், மோட்டார் ஸ்கூட்டர், அதில போய் நர்சிங் ஹோம்ல இருக்கிற நோயாளிகளை பார்ப்பார். அவர் தன்னுடைய இயலாமையில் கூட மற்றவர்களுக்கு சிகிச்சை கொடுக்கனுன்ற சேவை மனப்பான்மையோடு இருந்தார். ஆனா அவரோட வியாதி அவர ரொம்பவும் வாதித்தது. ஒரு கட்டத்துல அவருக்கு எந்தவித உதவியும் செய்ய முடியாம அவரோடு வீட்டுல ஒரு மூலையில் படுத்த படுக்கையில் இருந்தார், உணவு குழாய் மூலமாக செலுத்தப்பட்டது, முனுங்கள் மட்டும்தான் இருந்தது பேசுவது ரொம்ப கடினமா இருந்துச்சு.

நா அவரை போய் பார்க்கும்போது, அவரை போய் பார்க்கனுன்னா எனக்கு ரொம்ப பிடிக்கும் ஏன்னா அவருடைய அந்த மனப்பான்மை எனக்கு பெரிய உந்துசக்தியாக இருந்திருக்கிறது அதனாலதான். சரி, ஒரு இரவு, அவருக்கு சுவாசிப்பதே ரொம்ப கடினமாக மாறிய அன்று. யாரையாவது உதவிக்கு கூப்பிடனுன்னு நினச்சாறு, ஆனா அவரால முடியல. அவரோட மனைவி மாடி அறியில் இருந்தாங்க அறைகளுக்கு இடையில் இருந்த மானிடர் அவரோட துண்டுபோன சத்தத்தை பதிவி செய்திட முடியவில்லை. இரவு வேலையில் ஒரு எறும்பு அவரது விரிப்பின் மீது இருப்பதை உணர்ந்தார், அப்பறம் நிறைய எறும்பு வந்தது, நூற்றுகணக்கான ஆயிரக்கணக்கான எறும்புகள் அங்க இருந்தது; ஏராளமான கருப்பு எறும்புகள் அவருடைய உடலை மூடிக்கொண்டது, அவருடைய மூக்கு, அவருடைய கண்கள், அவருடைய காதுகள். உடனடியா உதவிக்காக கூப்பிட நினைத்தார் ஆனால் அவரால முடியல.

எனக்கு இந்த செய்த கிடைக்கும்போது, நா இங்கிலாந்து போயிட்டு இருந்தேன். நா அந்த ஈமெயில வாசித்த போது அதிர்ந்து போனேன். அவருடைய மனைவி கேட்டிருந்தாங்க, “தயவு செய்து ஜெபிங்க, ஜான இந்த அளவுக்கு மன அழுத்தத்தோடு நான் பார்த்தது இல்ல.” நா, இங்கிலாந்துல இருந்து வந்த வுடனே நா செய்த முதல் வேலை என்னோட நண்பரை போய் பார்க்கும்படி சென்றேன். அந்த இரவில் நடந்த தாக்குதலினால் அவருடைய உடலில் இன்னும் கடுமையான

தழும்புகள் இருந்தது. ஆனா இதையெல்லாம் தாண்டி, அவருடைய கண்களின் துடிப்பை பார்க்க முடிந்தது. அவர் என்னை பார்த்து பெலவீனமான புன்னகையோடு என்ன சொன்னார் தெரியுமா, "அதை நா ஜெயிச்சுட்டேன், ஜோனி. அதை ஜெயிச்சுட்டேன். அதை நான் ஜெயிச்சுட்டேன்."

ஐம் சாரி, எனக்கு இந்த கதைய சொல்லும்போது தானா மூச்சடைக்க ஆரம்பிச்சிடும். ஏன்னா ஜான் எபேசியர் 3:10 போன்ற வசனத்தை சார்ந்திருக்கிறார் அதாவது, "உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக" ஜானுடைய கடைசி காலத்தில் நிறைய பேர் அவரை வந்து பார்க்கவில்லை. அவர் அதிக நாட்கள் வியாதியோடு இருந்தார் அதினால் பலரும் அவரை மறந்து விட்டார்கள். அவர் அநேகரோடு தொடர்புடையவராக இருக்கல. தோளோடு தோல் உராந்துகொண்டு இருக்கவில்லை. அவருடைய சாட்சி அநேகரிடத்தில் ஆதிக்கம் பெற்றிடவில்லை. ஆனால் அந்த படுக்கையில் அவருடைய வாழ்க்கை, அந்த அறையின் நடுவில் இருந்த அவர், பிரகாசிக்கும் சாட்சியாக மாறினார். அவருடைய வாழ்க்கை ஒரு கரும்பலகை போல இருந்தது தேவன் அதில் அவருடைய வாழ்க்கையை பற்றி பாடங்களை கற்றுகொடுத்தார். 'என் கிருபை உனக்கு போதும்.' தேவையுள்ளவர்களுக்கு நான் உதவிடுவேன்.' நொறுக்கப்பட்டவர்களின்

கூக்குரலை நான் கேட்க்கிறேன்." அவர்களுடைய உபத்திரவத்தில் நான் உற்ற துணையாக நின்றிடுவேன்." அதாவது தேவன் தம்முடைய வல்லமைகளை துறைத்தனங்களை வெளிப்படுத்துவது போல இருக்கிறது, பூமியில் இருக்கிற சிலருக்கு மட்டுமல்ல, இன்னும் நாம பார்க்காத மில்லியன் மில்லியன்களுக்கு மேலான மக்கள் இருக்காங்க, அவங்க கூட ஜானுடைய உத்தமத்தை கண்டு வியந்திடுவார்கள். இந்த மாதிரியான உத்தமத்தை காத்துகொள்கிற அளவிற்கு அவருடைய தேவன் எப்பேர்பட்ட தேவனாக இருப்பார் என்று அவர்களையும் யோசிக்க வைப்பார் என்பதில் சந்தேகமே இல்லை.

ஒருவர் தனிமையில் வேதனையோடும் இருக்கும்போது, அந்தமாதிரி மைக்கேலுக்கும் எனக்கும் நிறைய பேரை தெரியும். நாங்களும் இந்த வேதனை நிறைந்தவர்களின் கூட்டத்தில் ஒரு பங்காக இருக்கிறோம். இப்படி வேதனை படுகிறவர்களில் பலர் பல வருடங்களாக படுக்கையிலேயே இருந்துவருகிறார்கள்; ஒரு சிலர் பத்து வருடங்களுக்கு மேலாக படுக்கையில் இருக்கிறார்கள்; தங்களையே அடைத்து வைத்துகொண்டார்கள்; ஜான் மெக் அலெக்ஸ்சாண்டர் மாதிரி யாரும் அவங்களை வந்து பார்க்க முன்வருவதில்லை. அவர்களுடைய திடமான சாட்சிக்கு யாரும் செவிகொடுப்பது இல்லை. தனிமையில் விடபடுகிராார்கள். ஆனா நான் உங்களுக்கு சொல்கிறேன், பல மில்லியன் கணக்கான மக்கள் ஏதோவொரு வகையில் தேவன் எப்பேர்ப்பட்டவர் என்பதை தங்களுடைய சூழ்நிலை தங்களை ஆதரித்து

ஆதரவாக இருந்து தான்கிகொள்ளும் அவருடைய கிருபையை அறிந்துகொள்கிறவர்களாக இருக்கிறார்கள்.

**ஆன்கர்பெர்க்**: நாம ஆவிக்குரிய உலகத்தை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறோம் என நினைக்கிறேன், தேவனும் சேர்ந்து, அவர்களை பார்த்துகொண்டு இருக்கிறார். அதாவது, லூக்கா 15:10 கூறுகிறது, “மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாக சந்தோஷம் உண்டாயிருக்கிறது.” இங்கு நடக்கிற இந்த யுத்தத்தை ஆவிக்குரிய உலகம் பார்த்து கொண்டு இருக்கிறது. வேறு யாரும் பார்க்கலைன்னாலும், தேவனும் தூதர்களும், நன்மையும் தீமையும், என்ன நடக்கிறது என்று பார்த்துகொண்டு இருக்கிறது.

டாடா: ஓ, மை குட்னஸ், ஆமா. இது நம்மை தாழ்ந்திருக்க செய்திடும், ஒரு முக்கியத்துவமற்ற ஒரு விசுவாசியை போல தோன்றிடலாம்; அவங்களுடைய வாழ்க்கையே ஒரு பொற்காலம் போல தோன்றிடும் அங்க அந்த போரில் இந்த பிரபஞ்சத்தின் வலிமையான சக்திகள் போராடிடும். அது எப்படி இருக்கும்? அதாவது, இவை நம்முடைய நம்பிக்கை தேவனுக்கு நாம் கீழ்படியும் நிலை இவற்றில் இப்பிரபஞ்சத்தின் தாக்கம் எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்பதை வெளிப்படுத்துவது போல இருக்கும். ஜான் மெக் அலெக்ஸ்சாண்டர் மரித்த போது, கொஞ்ச நாட்களுக்கு முன்னால, அவருடைய் ஆவி பரலோகத்திற்கு போனதும் நிச்சயமா மில்லியன் கணக்கான தூதர்கள் விரைப்பா அட்டேன்ஷன்ல நின்னு இந்த பரிசுத்த வானுடைய ஆவி

தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக செல்லும்போது சல்யூட் அடிச்சிருப்பாங்க, ஏன்னா அவர் நிச்சயம் அப்படிப்பட்ட மரியாதைக்கு உரியவராக இருப்பார் என்று சொல்கிறேன். ஒரு பாவி மனந்திரும்புவதால் பரலோகமும் தூதர்களும் ஆனந்தமாக சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடையும்போது, அதே பாவி ஒரு பரிசுத்தவானாக மாறும்போது அவர்கள் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் சொல்லுங்க, இக்கட்டான சூழ்நிலைகளில் தேவனை நம்பியிருக்கிறார்கள், கிறிஸ்துவின் ராஜ்யத்தில் தன்னை திடமான ஒரு யுத்த வீரராக நிறுத்துகிறார் அல்லவா?

**ஆன்கர்பெர்க்**: சரி, கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வந்து நிற்கும் மக்களை குறித்து என்னுடைய மனதில் உண்டான கற்பனை கதையை பகிர்ந்திட விரும்புகிறேன், பீமா சீட். இங்க உங்க நண்பர் ஜான் வருகிறார். அவர் அப்படியே முன்னால நடந்து வருகிறார், அந்த இடம் முழுவதும் பிதாவாகிய தேவனுடைய சத்தம் முழங்கிகொண்டே இருக்கிறது, “இவர் என்னுடைய மகனுக்காக ஊழியம் செய்தவர் என்று.”

டாடா: ஹாலேலூயா

**ஆன்கர்பெர்க்**: இன்றைக்கு கனப்படுத்தப்படுகிறார்.”

டாடா: அந்த சந்தர்ப்பத்தை இழக்க எனக்கு மனதில்லை. நானும் அங்கிருக்க விரும்புகிறேன். நானும் ஜான் மெக்அலெக்ஸ்சாண்டரோட

வரிசையில் இருக்கணும். என்னுடைய இரட்சகரை வெட்கப்படுத்த விரும்பவில்லை, அவருடைய பெயரை கெடுக்கக்கூடாது, என்னுடைய முறுமுறுப்பு குறைகூறுதலினால் அவரை இகழ்ந்து பார்க்க கூடாது. என்னுடைய அறிக்கையை அசைவில்லாமல் உறுதியாக பிடித்திருக்கணும். முத்தையா நிகழ்ச்சியில் மைக்கேல் எபிரெயரில் இருந்த அந்த வசனத்தை பற்றி சொன்னார், "உங்கள் நம்பிக்கையிலே நீங்கள் உறுதியாக தரித்து இருங்கள்." ஏன்னா பரலோகத்தில் கனப்படுத்தப்படுகிறவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கணும். அதெல்லாம் பூமியில் இருக்கும்போதுதான் சம்பவிகிறது. வசனங்களில் சொல்லப்பட்டிருப்பது போல நம்முடைய விசுவாசத்தை நிருபிக்க நமக்கு குறுகிய காலம் தான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. என்னுடைய விசுவாசத்தை முறுமுறுப்பில்லாமல் நிருபிக்க வேண்டும், விடாமுயற்சியோடு, இரட்சகரை பின்பற்றி நிரூபிக்க வேண்டும்.

**ஆன்கர்பெர்க்**: ஜான் போன்ற நபர்களால்  மக்கள் மத்தியில் செல்வாக்கு உண்டானதை பார்ப்பதற்கு முன்பு , யோபினுடைய வாழ்க்கையை பற்றி பார்க்கலாம். யோபுக்கு தெரியாமல் ஒரு வாக்குவாதம் பரலோகத்தில் நடந்து கொண்டு இருந்தது, இல்லையா? மைகேல் அதை பற்றி சொல்லுங்க.

**டாக்டர் மைக்கேல் எஸ்லே**:  சரி, யோபுல 3 முறை வருகிறது, யோபு 1:8, 1:12 மற்றும் 2:6, அங்க தேவன் வந்து சாத்தானிடம் பேசுகிறார் அதாவது, :"கர்த்தர் சாத்தானை நோக்கி". இந்த பகுதியின்

முன்னுரை கொஞ்சம் வித்தியாசமா இருக்கும். யோபு தன்னோட நீதியான தொழிலை ஒழுங்கா பார்த்துட்டு இருக்கான், சரியா? இப்ப தேவன் சாத்தானை நோக்கி சொல்றாரு. இதை வாசிக்கிற நமக்கு இது எதுக்காக நடக்குது என்பது வியப்பாக இருக்கும். ஒவ்வொருமுறையும் அங்க கொஞ்சம் சமரசம் நடக்குது, ஒருவேளை இப்படி சொல்லலாம், யோபை வாதிக்கும்படி அவன் செய்கிற வேலையை இன்னும் கொஞ்சம் துரிதப்படுத்த இவர் அனுமதிக்கிறார் எனலாம்.

**ஆன்கர்பெர்க்**: தேவன் யோபை பற்றி புகழ்ந்து பேசறார், “என்னுடைய உன்னையுள்ள மனுஷனை போல யாரையாகிலும் பார்த்திருக்கிறாயா?

**எஸ்லே**: ஆமா ஜான். அதாவது இந்த மனிதம் மிகப்பெரிய காரியங்களை செய்கிறான் தேவன் இதை ஒரு காரணத்திற்காக அனுமதிக்கிறார் என்பதை மகிமையடையும் வரை புரிந்துகொள்ள முடியாது, அவனை நிபந்தனைகளோடு அனுமதிக்கிறார்: சரி, அவனை நீ தொடலாம், ஆனால் உயிருக்கு ஆபத்து வரகூடாது, அவனை நீ தொடலாம் என்கிறார். அவனுடைய பிள்ளைகளை கொள்கிறான், அவனுடைய வாழ்வாதாரங்களை அழிக்கிறான், அவனுடைய மனைவியை அவனுக்கு விரோதமாக திருப்பி விடுகிறான் என்று சொல்லலாம். ஒரு வியப்பான வசனம் இருக்குது யோபு 6:10, “அப்பொழுதாவது எனக்கு ஆறுதல் இருக்குமே, என்னை தப்பவிடாத நோவிலே மரத்திருப்பேன், பரிசுத்தருடைய வார்த்தைகளை நான்

மறைத்து வைக்கவில்லை." அது ஜானாக இருந்தாலும் சரி, ஜோனி, அல்லது யாராக இருந்தாலும் சரி, இந்த கொடுமையை தாங்க முடியுமா, இக்கட்டான சூழ்நிலையில் சொல்லுவோமா, "தேவனை நான் மறுதலிக்க மாட்டேனென்று? சில கேள்விகளை வைத்திருக்கிறேன்: சிலர் நிச்சயமா ஏன்னு கேட்பாங்க. நா கேட்பேன் எப்படிப்பட்ட கொடுமை இது. ஜோனியும் இது என்ன ஒரு கொடுமை என்று கேட்டிருப்பார்கள். ஆனா தேவனை நான் மறுதலிக்க மாட்டேன், நா முற்றிலும், தோற்றுப்போன, பாவம் நிறைந்த விசுவாசி சொல்லலாம், "இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் எப்படி வாழ முடியும்?" முந்தைய நிகழ்சிகளில் நாங்க இரண்டு பேரும் சொல்ல முயற்சித்து, மற்றவர்களை உற்சாகப்படுத்தினோம், இன்னும் காயத்தோடு இருக்கிற மக்களை நாங்கள் தேடிக்கொண்டு இருக்கிறோம், அவங்க அழுத்தத்தில் இருக்காங்க, எந்தவிதத்திலும் நம்பிக்கை இல்லாம இருக்காங்க. ஜோனியை போலவே, என்னைவிட்டு வெளியில வந்தப்ப - என்னுடைய நேரத்தில், குறைந்தபட்சம், பத்து சதவீதம் தீராத வேதனையில் இருப்பவர்களை ஊக்குவிக்கிறேன், சொல்லமுடியாத வலி, முதுகு பிரச்சனையுள்ளவர்கள், அவங்களுக்கு ஈமெயில் அனுபுறேன்,தொலைபேசி மூலம் தொடர்புகொள்கிறேன், அப்படியே அவங்ககிட்ட போய், உங்களுக்கு உற்சாகமான வார்த்தைகளை சொல்கிறேன், இயேசுவை பற்றிகொள்ளுங்கள், அடுத்த காரியத்தை செய்யுங்க, சோர்ந்திடவேண்டாம் என்கிறேன். எனது அருமையான நண்பர் மூடி சபையில் இருந்தார், இப்ப தேவனோடு

இருக்கிறார். அவர்தான் சொல்வார்,”மைகேல், சோர்ந்து போகாத. சோர்ந்து போகும் நிலை எதையும் சாதிப்பது இல்லை என்பார்.” அந்த எண்ணம் இருக்கணும், ஏன் எதற்கு என்று புரியாத நிலையிலும் உண்மையாக இருக்க உங்களுக்கு மனமும்டா?

**ஆன்கர்பெர்க்**: ஆமா. தேவன் இறுதியாக யோபினுடைய சரீரத்தை தொடுவதற்கு சாத்தானுக்கு அதிகாரத்தை கொடுப்பதை பார்க்கிறோம். அவருடைய சரீரம் முழுவதும் கொப்புளங்கள் உண்டாயிருக்கும் நிலை, சரியா? யோபுவினுடைய வார்த்தைகள் எப்படி இருந்தது, “அவர் என்னை கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிகையாயிருப்பேன்.” அது எனக்கு வல்லமை நிறைந்ததாக இருந்தது என்னுடைய தாத்தா, ஸ்வீடிஷ் தாத்தா, அவர் அதிகமாக நேசித்த அவரது மனைவி இறந்துவிட்டார்கள். அவர் எப்பவும் அதிகமா பேசமாட்டார். அடக்க ஆராதனையில் எழுந்து நின்றால். அவர்களுடைய அடக்க ஆராதனையில் அவர் சொன்ன ஒரே விஷயம், “அவர் என்னை கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்.” அங்கேயே உட்கார்ந்துட்டார். அதை என்னால மறக்க முடியாது, ஏன்னா அவர் தேவனை நம்பியிருந்தார் என்ன நடக்குதுன்னு தேவனுக்கு நன்றாக தெரியும் எல்லாத்தையும் நன்மைக்காக செய்திடுவார் என்றிருந்தார்.

ஆல்ரைட், ஏன், நீங்க அதிகப்படியான வேதனையை அனுபவிக்கும்போது, உங்களுடைய சரீரம் எங்களுக்கு எந்த ஒத்துழைப்பும் கொடுக்காத போது, நீங்க ஏன் தொடர்ந்து

போகவேண்டியிருக்கு? இன்றைக்கு அமெரிக்காவில் நிலவி வரும் ஞானம், உலகத்தின் பல இடங்களிலும் இப்படிதான் இருக்கு, அப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போது, ஹே, தற்கொலை செய்துகொள்வது நல்லது; இங்கிருந்து போயிடனும், அவ்வளவு தான். ஏன் அப்படி தோணுது, மைகேல்? வேதாகம ரீதியாக அவங்க செய்யும்படியான காரியங்கள் ஏதாவது மீதமிருக்குதா?

**எஸ்லே**: அந்த காரியங்களை புரிந்துகொள்வது கடினமாக இருக்கலாம்; அதை அளவிடுவது கடினமாக இருக்கலாம். ஆனால் சங்கீதம் 115 மற்றும் 116 ல இரண்டு பகுதிகள் எனக்கு சவால்விடுவதாக இருக்கிறது, அங்குதான் சங்கீதக்காரன் சொல்கிறான், "மரித்தவர்களும் மவுனத்தில் இருப்பவர்களும் தேவனை ஒருபோதும் துதிக்க மாட்டார்கள். நாமோ இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறவர்களாக இருந்திடுவோம்." அப்ப நாம செய்ய வேண்டிய வேலை இருக்கிறது. ஏன்னா இந்த காட்சியில் இருந்து நா வெளியேறிட்டா எல்லாம் முடிந்துவிடும். ஆமா, ஜனங்க ரொம்ப நல்லா பேசுவாங்க, அதாவது அவங்க, மரணத்திற்கு பின்னால என்ன நடக்குமென்று அழகா பேசுவாங்க. ஆனா இப்ப நமக்கு இருக்கிற இந்த சந்தர்ப்பங்கள் மறுபடியும் நமக்கு கிடைக்காது. என்ன ரொம்ப அசைத்த ஒரு வேதபகுதி சங்கீதம் 116:15 இந்த இடத்தில் சங்கீதக்காரன் சொல்கிறான், "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது," இந்த இரண்டையும் ஒன்னா வைச்சு

பாருங்க, இதுதான் சரியான நேரம் என்று சொல்ல நமக்கு அதிகாரம் இல்ல. ஆனா நேரம் வரும்போது, அது தேவனுடைய அருமையாக இருக்கும். அவர் கரிசனையோடு இருக்கிறார்.

சில வருடங்களுக்கு முன்னால என்னோட ஆசிரியரோட அடக்க ஆராதனையில் இருந்தேன், ஜான், பெரிய ஆலயத்துக்கு முன்னால தனியா கல்லறை தோட்டம் எங்களுக்கு இருந்தது. அவருடைய நெருங்கிய நண்பர் உபாகமம் முப்பத்தி நான்கை வாசித்தார் தேவன் வந்து மோசேயை யாருக்கும் தெரியாத இடத்தில் அடக்கம் பண்ணுகிறார். இதுவரைக்கும் நான் கேட்டிராத விதத்தில் விவரித்து சொன்னார். ஒரு ஊழியனுடைய மரணத்தில் ஒரு கனம் இருக்கணும் அதனாலதான் இயேசுவே இறங்கி வந்து ஊழியனான மோசேயை அடக்கம் பண்ணினார், தனித்துவமிக்க ஊழியன். இதை நான் ஒன்று சேர்த்து பார்த்தேன்:ஒரு காலம் இருக்குது, அதுக்குன்னு ஒரு இடமிருக்கு. அந்த தீர்மானத்தை எடுக்க வேண்டியது நாம இல்ல. இந்த வாழ்க்கையில் இருந்து அடுத்த நிலைக்கு தேவ மனிதன் செல்வது தேவனுக்கு அருமையானதாக இருக்கிறது.

இதை ஏற்றுகொள்வது கடினம்தான், அசைக்க முடியாத செல்வாக்கை உண்டாக்கணும் மனிதனாக, மனுஷியாக, தேவன் விரும்புவது போல இருக்கணும், எப்பேர்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் சரி, உண்மையாக இருக்கனும், ஒன்றை மட்டும் தெரிந்துகொள்ளணும், “நா அடுத்த காரியத்தை செய்ய போகிறேன்; இன்றைய நாளை

எதிர்கொள்ள போகிறேன்; என்னை போல இருப்பவர்களுக்காக ஜெபிக்க போகிறேன்; தொடர்ந்து முன்னேற தேவன் எனக்கு போதிய இரக்கமும் தயவும் பாராட்டும்படியாக ஜெபிக்க போகிறேன்." தேவனுடைய காலத்திற்கு முன்பு எந்தவித தீர்மானத்தையும் எடுக்க நமக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று நான் நினைக்கிறேன்.

**ஆன்கர்பெர்க்**: சரி. உங்களுடைய நண்பர்கள் வட்டாரத்தில் கூட ஒருத்தர் தற்கொலை செய்துகொண்டு இதிலிருந்து தப்பிக்க நினைத்த சம்பவம் இருக்குதுல்ல, நீங்க அவங்ககிட்ட இதை பற்றி பேசினீங்க. அந்த சம்பவத்தை சொல்லுங்க.

டாடா: சரி, அவங்க ஒரு பெண் அவங்களை எங்களோடு ஜோனி அண்ட் பிரெண்ட்ஸ் ரெட்ரீட்ல பார்த்தேன். விசேஷ தேவையுள்ள குடும்பங்களுக்காக நாங்க இந்த ரெட்ரீட்ட நடத்துகிறோம். கார்லா லேசனும் இதுல பதிவு செய்திருந்தாங்க. அவர்களுடைய பதிவு சான்றிதழை நான் வாசித்து பார்த்துகொண்டிருந்தேன் அப்பத்தா தெரிந்தது, ஓ மை குட்னஸ், இந்த பெண் உண்மையில் ரொம்ப பலசாலிதான், மூன்று முறை ஹார்ட் அட்டேக் வந்திருக்கு, அவங்களுக்கு ஒரு கிட்னி தான் இருக்கு, அவங்களுக்கு தீராத வேதனை இருக்குது அதோட, அவங்களுக்கு அஞ்சியோ பிலாச்டிஸ், கண்கள் குருடானது, சமீபத்துல இரண்டு விரல்களை இலந்துட்டாங்கன்னு பார்த்தேன். எனக்கு நானே சிந்திக்க ஆரம்பித்தேன், "இந்த பெண்மணியை நான் சீக்கிரமாக பார்க்கணும்."

அவங்கள கேம்பஸ் முழுவதும் தேடி கண்டுபிடித்து அவங்க கிட்ட, "கார்லா, நீங்க வந்ததுல சந்தோஷம் என்றேன், அதுக்கு அவங்க சொன்னாங்க, "ஆமா, என்னோட சரீரத்தின் மற்ற பாகங்களை இழப்பதற்கு முன்பு இங்க வந்திடனுன்னு ஆசைப்பட்டேன்." எனக்கு அது ரொம்ப அதிர்ச்சியா இருந்தது... அவங்களோட நகைசுவை உணர்வை அவங்க இலந்துட்டாங்க. இங்க அவங்க தங்களோட சக்கர நாற்காலியில் இருந்தாங்க. அவங்களோட பாவாடைக்கு கீழ் இருந்த ஊன்றுகோலை நான் பார்த்தேன். அவங்க போலியான கால்களை பொருத்தவில்லை, மாறாக அவங்க ஒரு மெட்டாலிக் விதமானத்தை அணிந்திருந்தார்கள். அவங்களோட விரல்கள் கட்டுபோடபட்டிருந்தது. ஒரு கையில அவங்களுக்கு மூன்று விரல்களும் இன்னொன்றில் இரண்டும் இருந்தது. என்னை பார்த்து கேட்டாங்க, கட்டுபோடப்பட்டிருந்த கரங்களை இணைத்து கால்கள் இல்லாத மூட்டுகளை உயர்த்தியபடி கேட்டாங்க, நா ஏன் இன்னும் இருக்கணும்? எப்படியும் தேவன் என்னை தமது வீட்டிற்கு அழைத்து செல்ல இருக்கிறார், அது ஏன் சீர்க்கிரமாக இருக்க கூடாது? ஜோனி, இது, ரொம்ப கஷ்டமாக இருக்கு. நா ஏன் இருக்கனுன்னு எனக்கு சொல்லு என்றாள்."

நா அவங்க கிட்ட சொன்னே, "கார்லா, நீங்க எனக்காக வேதத்தை திறந்து ஒரு பகுதிய வாசிக்கணும்." அது விளையாட்டா இருக்குன்னு அவங்க நினச்சாங்க, ஏன்னா விரல்கள் இல்லாத ஒரு பெண்ணை

பார்த்து நான் வேதத்தை திறக்கும்படி சொன்னதனால. ஆனா அவங்கள விட என்னோட நிலைமை மோசமானது என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்தினேன். என்னோட விரல்கள் எதுவும் வேலை செய்யாது. அதனால என்னுடைய சக்கர நாற்காலியில் கால்களுக்கு இடையில் இருந்த வேதாகமத்தை எடுத்தாங்க. நான் சொன்னேன், "பிலிப்பியர் ஒன்றாம் அதிகாரத்தை எடுத்து வசனம் 21

ல் இருந்து வாசிங்க." அவங்க வாசிக்க துவங்கினாங்க, "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம். ஆமா, இங்க பாரு, ஜோனி, சாவு எனக்கு ஆதாயம். அப்ப நா தேவனோடு இருப்பதுதான எனக்கு நல்லதுன்னு சொன்னாங்க.நா சொன்னேன், தொடர்ந்து வாசிங்க. ஓகேன்னு, சொல்லி வாசித்தாங்க, 'ஆகிலும் சரீரத்தில் பிழைத்திருக்கிறதினாலே என் கிரியைக்கு பலன் உண்டாயிருப்பதால், நான் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னதென்று அறியேன். ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன். தேகத்தை விட்டு பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு அதிட நன்மையாயிருக்கும்,' மேலும் தொடர்ந்து வாசித்தாங்க, அபப்டியிருந்தும் நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம்."

நா அப்ப, "கார்லா, போதும். மறுடியும் கடைசி பகுதிய மட்டும் வாசிங்கன்னே." ஏன்னா நீங்க இருக்கவேண்டியது மற்றவர்களுக்கு அவசியமாக இருக்கிறது என்று சொல்கிறது. இயேசுவை அறியாத ஒரு

நர்ஸ்தா உங்களுக்கு கிளினிக்ல உதவியாக இருந்து காயங்களுக்கு கட்டு போடறவங்களா இருக்காங்க. உங்களுடைய வேதனை அதிகமாக இருக்கிறது, இருந்தாலும் கிறிஸ்து இல்லாமல் நித்தியத்தில் அவங்க படபோகிற வேதனையோடு ஒப்பிட்டு பார்க்கும் போது இது சிறு வேதனையாகத்தான் இருக்கும். இயேசுவை பற்றி அறியாத உங்க உறவினர்கள் பலரை பற்றி சொன்னீங்க. உங்களுடைய கல்லூரியின் பழைய கூடைபந்து அணியினர் இயேசுவை பற்றி அறியாமல் இருப்பதை சொன்னீங்க. உங்களை மதிக்கும் மருத்துவமனையில் உள்ள மக்களை பற்றி கூட சொல்லியிருக்கீங்க, உங்களை வியப்பா பார்க்கிறாங்க, உங்களை நேசிக்கறாங்க. உங்களுடைய நம்பர்களுக்கு உங்க மேல மரியாதை இருக்குது. கார்லா, அவங்களுக்காக நீங்க இன்னும் கொஞ்சம் நாள் இந்த உலகத்துல வாழ கூடாதா? யோசித்து பாருங்கள் என்றேன்."

பிலிப்பியர் 2 நான்கு: "அவனவன் தனக்கானவைகளை அல்ல, பிறனுக்கானவைகளையும் நோக்குவானாக." ஒருவருடைய நித்திய நிலையை குறித்து யோசிப்பதை விட வேறு எதுல அதிக ஆர்வமுடையவர்களாய் இருப்பது சிறந்ததாக இருக்கும்? "கார்லா, உங்களை நீங்களே சீக்கிரமா அனுப்பி வைக்காதீங்க. இதை யோசிங்க, விடாமுயற்சியோடிருங்க. ஏன்னா நீங்க இருக்க வேண்டியது தங்களுக்கு ரொம்ப முக்கியம் என்று நினைக்கிற ஜனங்கள் ரொம்ப அதிகமாக இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்."

ஜனங்க விடாமுயற்சியோடு இருப்பதற்கு இந்த வசனம் பெரும் உதவியாக இருக்குமென நம்புகிறேன். உங்களுடைய சுயநலம் என்னும் சக்கரத்தை விட்டு வெளிய வந்து உங்களுடைய விடாமுயற்சியின் முக்கியத்துவம், தேவ்னோடிய கிருபையால் உண்டாகும் பொறுமை, இதெல்லாம் மற்றவர்களுடைய வாழ்க்கையை மாற்றும் ஒன்றாக இருக்கும், உங்களை பார்க்கிற நாத்திகர்கள், விமர்சகர்களை மாற்ற கூடும். உங்களுடைய உறுதியான நிலையை பார்க்கும்போது, அது தேவனுடைய கிருபையால் உண்டாயிருக்கிறது என்பதை அறிந்து, நீங்கள் விசுவாசிக்கும் தேவனை பற்றி ஒன்றிற்கு இரண்டு முறை சிந்திக்க வைக்க எதுவாக இருக்கும். அந்த நல்ல காரணத்திற்காக இதை பற்றிகொண்டிருக்க வேண்டும்.

**ஆன்கர்பெர்க்**: சரி, மைகேல், இதை நாம் பற்றிகொள்வதற்கு நான்கு காரணங்கள் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்: நம்முடைய பாகத்தில், ஒருவேளை இதைவிட அதிகமாக கூட தேவன் நமக்கு காண்பிக்க விரும்பிடலாம். நம்முடைய குடும்பத்தினர், நண்பர்கள், மற்றவர்கள்; தேவனுடைய மகிமைக்காக நடக்கலாம், அவருக்கு என்ன லாபம்; இதையெல்லாம் பரலோக சேனை பார்த்துகொண்டு இருக்கிறது. குடும்பம் என்று சொல்லும்போது துவக்கத்தில் இருந்து பார்க்கவேண்டும். ஜனங்கள் ஒரு முடிவுக்கு வரும்போது, தங்களுடைய பிள்ளைகளுக்கு மிகபெரிய தாக்கத்தை உண்டாக்குகிறோம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும், பேரப்பிள்ளைகள், சொந்த மகன்கள்

மற்றும் மகள்கள், சுற்றி இருக்கிற நண்பர்கள் கூட. இதை பற்றி கொஞ்சம் சொல்லுங்க.

**எஸ்லே**: அந்த கடைசி சில வார்த்தைகளில் இந்த உலகமே உங்களுக்கு சொந்தம் என்ற உணர்வு உண்டாகும். நீங்க சொன்ன அந்த நான்கு காரியங்கள் எல்லாம், ஜான், அது விவரிக்க முடியாத தாக்கத்தை உண்டாக்கும். அது எவ்வளவு வலிமை வாய்ந்தது என்று சொல்வதற்கு முடியாது. என்னை பொருத்தவரைக்கும் நம்மில் பலர் வயதாகும் போது, நிச்சயமா நம்முடைய ஞானம் அதிகரிக்கும் மேலும் நம்முடைய வாலிப நாட்களில் இருந்ததை விட அதிக மிருதுவாக மென்மையாக நடந்துகொள்வோம் என நினைக்கிறேன். மற்ற பிரச்சனைகளோடு இருப்பவர்களை வேறுவிதமாக பார்ப்போம். நம்முடைய பிள்ளைகள் மீது அதிக மனதுருக்கத்தோடு இருப்போம், பலதரப்பட்ட உறவுகளில் மனதுருக்கம் நிறைந்தவர்களாய் கிறிஸ்துவினிமித்தம் நாம் அவர்களை நேசிக்க துவங்குவோம். அதுவே ஒருவேளை ஒரு திருப்புமுனையாக, இருக்கும், அந்த திருப்புமுனை அவர்களுக்கு உதவியாக இருக்கும், “இந்த நபருடைய வேதனையில், சுகவீனத்தின் மத்தியிலும், எனக்கு ஊழியம் செய்கிறார்களே என்று சொல்வார்கள்.

**ஆன்கர்பெர்க்**: உங்க இரண்டு பேருக்கும், எல்லாமே முடிந்து போகிற கட்டத்தில் வந்து நிற்கிற ஜனங்கள் தங்களுடைய ஆவியை உறுதியாக வைத்துகொள்ள எப்படிப்பட்ட ஊக்கத்தை கொடுக்க விரும்புகிறீர்கள்?

டாடா: சரி, என்னை பொருத்தவரைக்கும் உங்களுக்காக ஜெபிக்கிற ஜனங்களோடு  பயணிப்பது சிறப்பாக இருக்கும் என நினைக்கிறேன். நாம மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் கொடிய வேதனைக்கு விரோதமாக யுத்தம் செய்வதில்லை; நாம குவாட்ரிப்லீகா நோயின் மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் விரோதமாக போராடவில்லை, அல்லது தண்டுவட காயத்திற்கும், மல்டிபிள் ஸ்க்லீரோசிஸ், அல்லது சீரற்ற ஆஸ்டியோஜெனிசிஸ், அல்லது லூ கீஹ்ரிக் வியாதியோடு, அல்ஹீமர், ஆடிசத்தோடு போராடல. நாம துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் விரோதமாகவும் வானமண்டலத்திலுள்ள சேனைகளோடு போராடுகிறோம் நம்மை தோற்கடித்து ஏமாற்றத்திலும் மன அழுத்தத்திலும் தள்ள நினைப்பவைகளோடு தான் நமக்கு போராட்டம் உண்டு. அதனால சில கிறிஸ்தவ நண்பர்களிடம் உங்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டு இந்த ஏமாற்றம் என்ற அரண்களை முற்றிலுமாக தகர்த்திடுங்கள். கிறிஸ்தவ நண்பர்கள் உங்களுக்கு இல்லை என்று சொன்னால், அருகில் உள்ள சபையை அணுகி அவர்களுடைய ஜெப குழுவோடு ஐக்கியம் வைத்துகொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறவர்களிடம் உங்களுடைய அறிக்கைகளை சொல்லுங்கள். ஏன்னா ஜெபம்தான் இருதயங்களை மாற்றிடும். ஜெபமானது உங்களுடைய கண்ணோட்டத்தை கூட மாற்றக்கூடியது. ஜெபமானது ஏமாற்றத்தை அகற்றிவிடும். அது உங்களை வெளியில் கொண்டு வந்திடும். மேலும், நான் ஏற்கனவே சொன்னது போல,

யாரும் தனியாக வேதனை படகூடாது. அதற்காக தான் தேவன் ஆவிக்குரிய சமுதாயத்தை உண்டாக்கி இருக்கிறார். அதனால மற்றவர்களுக்கு உதவும்படியா உதவிடலாம என்று கேட்டு செயல்பட துவங்குங்கள்.

**ஆன்கர்பெர்க்**: சரி. நீங்க தன்னோட வீட்டில் ஒரு மூலையில் நட்சத்திரங்களை கூட பார்க்க முடித்தபடி படுத்த படுக்கையாக இருந்த ஒரு பெண்ணை பற்றி சொல்லிய சம்பவம் எனக்கு ரொம்ப பிடித்திருந்தது.

டாடா: ஆமா.

**ஆன்கர்பெர்க்**: மேலும் உங்களுக்காக ஜெபிக்கிறதுல சந்தோஷப்படுகிறேன் என்று சொல்லியிருந்தாங்க.

டாடா: நிச்சயமா. அது சிறிய குழு தான், 35 பேர் வேதனையோடும் தீராத வலியோடும் இருப்பவர்கள். அதுல இந்த பெண்மணி, ரிகா தீரோன். இவங்க தென் ஆப்ரிக்காவில் இருக்காங்க, இவங்க கடந்த பத்து வருடமா படுத்த படுக்கையா இருக்காங்க. ஒரு முறை அவங்களுக்கு ஈமெயில் அனுபினது நினைவிருக்கு, “ஓ, இன்று இரவு உங்களுக்கு அருகில் இருக்கிற நட்சத்திரங்களை பார்த்து மகிழ்வீர்கள் என நம்புகிறேன் என்று எழுதினேன்.” அவங்க இருக்கிறது, நான் சொன்னமாதிரி, தென் ஆப்ரிக்காவில். அவங்க அதுக்கு, “ஒத், ஜோனி, மறு கடிதம் போட்டாங்க, “பல வருடங்களாக நான் நட்சத்திரங்களை

பார்க்கவே இல்லை. என்னோட படுக்கை என் அறையின் மூலையில் இருக்குது அங்கிருந்து என்னால பார்க்க முடியாது. ஆனா அது வானத்துலதான் இருக்குதுன்னு தெரியும், அதுவே எனக்கு போதும் என்று எழுதியிருந்தார்கள்.” மைகேல் மற்றும் எனக்காக ஜெபிப்பது அவங்களுக்கு சந்தோஷத்தை தருவதாக சொல்வாங்க, ஆமா, இந்த வேதனைகளோடு இருக்கிற எல்லாருக்காகவும் ஜெபிப்பாங்க. எனக்காக அவங்க பரிந்துபேசி ஜெபிக்கிராங்கன்னா, என்னால முடிந்த அளவிற்கு பரிசுத்த ஆவியானவர் என்னோட வாழ்க்கையை கொண்டு என்ன செய்ய விரும்புகிறாரோ அதை செய்வதற்கு என்னால இயன்ற அனைத்தையும் செய்ய உற்சாகமாக முன்வந்திடுவேன்.

**ஆன்கர்பெர்க்**: ஆல்ரைட். அடுத்த வாரம் உங்க இரண்டு பேருகிட்டயும் ஒரு கேள்வி கேட்க்க போகிறேன். தொடர்ந்து சில பெலவீனங்கள் இருந்துகொண்டே இருக்கும்போது எப்படி மன அழுத்தத்திற்குள் போகாம பார்த்துக்குறீங்க, மார்பக புற்றுநோய், இன்னும் தாங்க முடியாத வேதனை வருதுல்லையா. அது ஒரு ரயில் வண்டிய போல தொடர்ந்து வந்துட்டே இருக்கு நிறுத்தப்படுவதே கிடையாது, அது நிற்க போறதும் கிடையாது. மன அழுத்தம் என்ற நிலையில இருந்திருப்பீங்க, நேயர்களுக்கு உங்க ஆலோசனை என்ன, நீங்க அனுபவித்துகொண்டிருக்கும் இதே விதமான அனுபவம் உண்டாகும்போது அவர்கள் என்ன செய்யவேண்டும்? அடுத்த வாரம் தவறாமல் பார்ப்பீங்கன்னு நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2016 A.T.R.I.